தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, ஆனி 30, திருவள்ளுவர் ஆண்டு–2050

2019 ஜூலை 15, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு."

பயம் இல்லாதிருத்தல், ஏழைக்குக் கொடுக்கும் கொடை, சிறந்த அறிவு, மிகுந்த ஊக்கம் இந்த நான்கினையும் குறை இல்லாமல் நிறைவாகப் பெற்றிருப்பவர் சிறந்த ஆட்சியாளர் ஆவார்.

1. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

101—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***46875—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், வெள்ளகாலில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2019 ஜூலை 15

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், தென்காசி கல்வி மாவட்டம், வெள்ளகாலில் உள்ள நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு, அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யாததால், வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.*

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஜூலை 15 ஆம் நாள், பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். ஏனென்றால், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாள். ஏழைகளின் இதயங்களில் எல்லாம் வாழ்ந்து கொண்டிருப்பவர், டெல்லியிலே தமிழகத்திற்கு ஒரு முகவரியைப் பெற்றுத் தந்தவர், வரலாற்றுச் சிறப்புமிக்க மதிய உணவுத் திட்டத்தினைத் தந்தவர், பெருந்தலைவர் காமராஜர் அவர்களை நம் தமிழ்ச் சமுதாயத்தின் சார்பாக பாதம் தொட்டு வணங்குகிறேன்.*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், புரட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை சிறப்பாக வழி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், தென்காசி கல்வி மாவட்டம், வெள்ளகாலில் ஒரு நடுநிலைப் பள்ளி சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அங்கு 149 மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள். அதில் 6 ஆம் வகுப்பு, 7 ஆம் வகுப்பு, 8 ஆம் வகுப்புகளில் மட்டும் 67 மாணவர்கள் படிக்கின்றார்கள். அதில் 8 ஆம் வகுப்பில் மட்டும் 28 மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள். நான் இதனை எதற்குச் சொல்கிறேன் என்றால், 8 ஆம் வகுப்பில் படிக்கும் மாணவ, மாணவிகள் 28 பேரில், 14 அல்லது

15 மாணவர்கள்கூட மேல்நிலைக் கல்விக்குச் செல்வதில்லை. காரணம், வெள்ளகால் பகுதியில் சிற்றாறு என்று சொல்லக்கூடிய அந்த ஆற்றினைச் சுற்றி அந்தக் கிராமங்கள் அமைந்துள்ளதால், பெற்றோர்கள் பயந்துகொண்டு அந்த மாணவர்களை மேல்நிலைக் கல்வி பயில அனுப்புவது இல்லை. அந்தப் பள்ளியிலிருந்து சுமார் 50 மீட்டர் தூரத்தில், சாலையிலிருந்து சிறிது தூரம் தள்ளி 3 ஏக்கர் பரப்பளவில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான நிலம் உள்ளது. அந்த இடத்தினை நமது கல்வித் துறை பெற்று, அங்கு இந்தப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித்தர ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கல்வி வளர்ச்சி ஆண்டு பற்றி குறிப்பிட்டார்கள். இன்றையதினம், பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கான மணிமண்டபத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் திறந்துவிட்டு வந்திருக்கிறார்கள்.* (மேசையைத் தட்டும் ஒலி) *அதற்காக முதலில் நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், பெருந்தலைவர் அவர்களை நினைவில்கொண்டுதான், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, பத்தாம் வகுப்பு படிக்கின்ற 15 மாணவர்கள், மேல்நிலைப் பள்ளியில் படிக்கின்ற 15 மாணவர்கள் என தலா ரூ.10,000/–, ரூ.20,000/– என்ற முறையில் அந்த மாணவர்களுக்காக 1 கோடியே 45 இலட்சம் ரூபாயினை வழங்கி, கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் நினைவாக இந்த விழாவினை ஆண்டுதோறும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், அவர் குறிப்பிட்ட அந்தப் பள்ளியில் 15 சென்ட் இடம் மட்டும்தான் இருக்கின்றது. அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகை ரூ.1 இலட்சம் அவர்களால் செலுத்தப்படவில்லை. 8 ஆம் வகுப்பில்

மாணவர்களின் எண்ணிக்கை 27 மட்டும்தான் உள்ளது; குறைந்தது 50 மாணவர்கள் இருந்தால் மட்டும்தான் அதனைச் சேர்க்க இயலும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது குறித்து ஆய்ந்து அதற்குப் பிறகு இடம் இருக்குமேயானால், நிதியினைக் கட்டி, அதற்குப் பிறகு 50 மாணவர்கள் சேர்க்கை வருகின்றபோது அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தருவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு படிப்பவர்கள் 149 மாணவர்களாக இருந்தாலும்கூட, 122 மாணவர்கள் ஆதி திராவிட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள். அங்கு கிட்டத்தட்ட 75 சதவிகித ஆதி திராவிட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள் படிக்கின்ற காரணத்தினால், அந்தப் பள்ளியினை சிறப்புக் கவனமாக எடுத்து தரம் உயர்த்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர் கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரரான மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழியில் வந்தவர். இப்பொழுது நிலுவைத் தொகை மற்றும் இடங்கள் போன்ற பிரச்சினைகள் இருந்தாலும்கூட, என்னுடைய தொகுதிக்குட்பட்ட கடையநல்லூர் ஒன்றியத்தில் குலயனேரி என்ற கிராமத்தில் ஓர் உயர்நிலைப் பள்ளி சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதற்கான நிலுவைத் தொகையும் கட்டப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான 5 ஏக்கர் நிலமும் உள்ளது. அதனால் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே, அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தருவாரா என்பதனை தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜுலை 15]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தருவதற்கான தகுதிகள் இருக்கின்றன, நிதியும் செலுத்தியாகிவிட்டது என்று குறிப்பிட்டார்கள். அப்படி இருக்குமேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதியில் L.N. புரம் என்று வழக்கத்தில் அழைக்கக்கூடிய லஷ்மி நாராயணபுரம் என்கிற ஊராட்சி இருக்கிறது. இந்த ஊராட்சியில் ஒரு நடுநிலைப் பள்ளி இருக்கிறது. அந்த ஊராட்சியைச் சுற்றி மாத்தூர், செட்டிமேடு, அரசர்கோவில், வழுவன்கொல்லை போன்ற பல்வேறு பகுதிகளிலுள்ள மாணவர்கள், மதுராந்தகம் நகரத்திலிருந்து 20 கிலோமீட்டர் தூரம் சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, நூற்றுக்கணக்கான மாணவர்கள் படிக்கக்கூடிய நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். மேலும், ஒரு பணிவான வேண்டுகோள். மதுராந்தகம் நகராட்சி, 35,000 பொதுமக்களைக் கொண்ட நகராட்சி. அந்த நகராட்சியிலே அரசு மேல்நிலைப் பள்ளியும் இல்லை, உயர்நிலைப் பள்ளியும் இல்லை. மதுராந்தகம் நகரத்திலிருந்து 2 கிலோமீட்டர் தூரத்திலுள்ள நகராட்சிக்குட்பட்ட நடுநிலைப் பள்ளி மட்டும்தான் 8–வது வரை படிக்கின்ற மாணவர்களுக்கென இருக்கிறது. ஊராட்சியாக இருக்க வேண்டிய மோச்சேரி என்ற பகுதி மதுராந்தகம் நகராட்சியோடு இருக்கின்றது. அந்த நகராட்சியிலே நடுநிலைப் பள்ளி மட்டும்தான் இருக்கிறது. மதுராந்தகம் நகரத்தைச் சுற்றி இருக்கக்கூடிய சிலாவட்டம், பாக்கம், ஊனமலை, முதுகரை, ஜமீன் என்டத்தூர் போன்ற பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் படிப்பதற்கு மதுராந்தகம் நகரத்திலே அரசு சார்பிலே உயர்நிலைப் பள்ளியும்

இல்லை, மேல்நிலைப் பள்ளியும் இல்லை. எனவே, L.N. புரம் ஊராட்சியில் இருக்கக்கூடிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றித் தரவும், அதேநேரத்தில் மதுராந்தகம் நகரத்தில் இதுவரை மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆகியவை அரசுத் தரப்பிலே இல்லை என்பதால் அவற்றை உருவாக்கித் தரவும் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கேள்விகளை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். லஷ்மி நாராயணபுரம் என்கிற இடத்திலிருக்கிற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. லஷ்மி நாராயணபுரம்-லஷ்மி, நாராயணன் இரண்டுமே செல்வத்தைத் தருவதால், நீங்கள் சரஸ்வதியை அழைக்கிறீர்கள். இந்த ஆண்டு முடியுமா என்பதைப் பார்த்து நாங்கள் அதைப் பரிசீலிக்கிறோம்.

அதே நேரத்தில் மதுராந்தகத்தைப் பொறுத்தவரையில், வளர்ந்து வருகின்ற ஒரு நகரம். அங்கு நடுநிலைப் பள்ளி மட்டும்தான் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கான நிதியும், இடமும் இருக்குமேயானால், இந்த ஆண்டே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் அதைப் பரிசீலனைக்கு எடுத்துச்சென்று, உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

102—

துணை மின் நிலையம்

***39435—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—